2010 ஏப்ரல் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 89, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**89—**

**மரக்கன்று வளர்ப்பு மையம்**

***107770—திரு. கி: ஆறுமுகம்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதியில் மரக்கன்று வளர்ப்பு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விவசாயிகளுக்கு மரக்கன்று வளர்ப்பது, வேளாண் காடுகளை உருவாக்குவது தொடர்பாக பயிற்சி அளிப்பது மற்றும் மரக்கன்றுகளை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்ட வன விரிவாக்க மையம் ஒன்று செங்கல்பட்டு தொகுதியிலே, செங்கல்பட்டில் வன விரிவாக்கப் பிரிவின்கீழ் செயல்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது புவி வெப்பமடைகிறது. அதைக் குறைக்க ஏராளமான மரங்களை நடவேண்டுமென்று உலகம் முழுவதும் இப்போது விழிப்புணர்வு ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது. மேலும், இந்தப் புவி வெப்பம் அடைவதைத் தடுப்பதற்கு நம்முடைய அரசு தமிழகம் முழுக்க இதுபோன்று மரம் வளர்க்கக்கூடிய வனங்களை அமைக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், இந்த மரங்களை வளர்ப்பதற்கு 'பசுமைத் தாயகம்' என்கிற அமைப்பு தமிழ்நாட்டிலே எங்களுடைய சின்ன அய்யா அவர்கள் தலைமையிலே மிகச் சிறப்பாகச் செயலாற்றிக் கொண்டிருக்கிறது. பல சமயங்களில் நாங்கள்கூட மரக் கன்றுகளைக் கேட்கிறோம். அவற்றைக் கொடுத்தால், நாங்கள்கூட கிராமங்களிலே போய்

நடுவதற்குத் தயாராக இருக்கிறோம் என்று தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் எல்லாம் கேட்டுக்கொண்டிருக்கின்றன. மரக் கன்றுகளாகக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற மரக்கன்றுகளை அதிகமாகப் பயிரிட வேண்டுமென்பதற்காகத்தான், தமிழகத்திலே வன விரிவாக்க மையங்கள், 32 மாவட்டங்களில், 30 மாவட்டங்களிலே செயல்பட்டு வருகின்றன. அதன்வழியாக மரக்கன்றுகள் உருவாக்கப்பட்டு, வளர்க்கப்பட்டு, நெல்லி போன்ற ஒட்டுக் கன்றுகளும் வளர்க்கப்பட்டு, விவசாயிகளுக்குப் பாதி விலையில், மானிய விலையிலே அவை வழங்கப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல், தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் மூலமாக மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் 1997–லே துவங்கி, இதுவரை கிட்டத்தட்ட 6 இலட்சத்து 57 ஆயிரத்து 679 எக்டர் நிலப் பரப்பிலே அந்த மரங்களெல்லாம் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், தனியார் காடுகளிலே மரம் வளர்க்க வேண்டுமென்று தலைவர் கலைஞர் அவர்கள்தான் இந்தப் பசுமைப் போர்வையை அதிகமாக்க வேண்டுமென்று இந்தியாவிலேயே முதல் முறையாக அதற்கு ஒப்புதல் அளித்து, கடந்த 3 ஆண்டுகாலமாக கிட்டத்தட்ட 52 ஆயிரத்து 500 எக்டரிலே அந்தப் பணியும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*நெடுஞ்சாலைத் துறையிலே மாண்புமிகு நம்முடைய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும், மரக் கன்றுகளையெல்லாம் பெற்று அவற்றையெல்லாம் சாலையோரங்களிலே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஏனென்று கேட்டால், சாலைகளை அகலப்படுத்துகின்ற நேரத்தில் அங்கிருக்கின்ற மரங்களெல்லாம் வெட்டப்பட்டுவிட்ட காரணத்தால் புதிதாக மரம் வளர்க்க வேண்டுமென்று அக்கறையோடு செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.*

2010 ஏப்ரல் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய அமைச்சர் அவர்கள், தமிழகத்திலே நடைபெற்றுக்கொண்டிருக்கிற மரம் வளர்ப்புத் திட்டங்களைப்பற்றி இங்கே சொன்னார்கள். இப்போது மரக்கன்றுகளை விவசாயிகளுக்குக் கொடுக்கிறபோது, மானிய விலையிலே கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை இலவசமாகக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு தமிழகத்திலே காடுகளின் அடர்வு குறைந்துகொண்டு வருகிறது என்று சொல்லப்படுகிறது. அதன் அடர்த்தியை அதிகரிப்பதற்கான சிறப்புத் திட்டத்தை அரசு மேற்கொள்ளுமா என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், மூலிகைச் செடிகளையும் வளர்ப்பதற்கு அரசு முன்வருமா என தங்கள்மூலம் கேட்டு, அமர்கிறேன்.

முற்பகல் 10–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம், ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வந்தது. அந்தத் திட்டம் சென்ற ஆண்டோடு முடிவடைந்துவிட்ட காரணத்தால், மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் சென்ற ஆண்டு அதே திட்டம் தொடருவதற்காக நிதியை ஒதுக்கித் தந்து, மீண்டும் 150 கிராமங்களிலே 32,000 எக்டரிலே காடுகள் வளர்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டிலே மூலிகைப் பண்ணைகள் 10 இடங்களில் அமைக்கப்பட்டு, அந்த மூலிகைகள் எல்லாம் பாதுகாக்கப்படுகின்றன. குறிப்பாக மேற்குத் தொடர்ச்சி மலைகளிலே அதிகமான மூலிகைகள் காணப்படுகின்றன. எங்கெல்லாம் மூலிகைகள் காணப்படுகின்றனவோ, அங்கெல்லாம் அவை பாதுகாக்கப்படுகின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல, உறுப்பினர் அவர்கள் இலவசமாக மரக்கன்றுகள் வழங்கப்படுமா என்று கேட்டார். பள்ளிகளுக்கு அல்லது அரசு அலுவலகங்களுக்கு மற்ற

*இடங்களுக்கெல்லாம் அவற்றை இலவசமாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்டார். ஆண்டுதோறும் கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் மரக்கன்றுகள் வழங்கப்படுகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த 3 ஆண்டு காலத்திலே மட்டும் 49,35,000 மரக்கன்றுகள் இந்த வன விரிவாக்க மையத்தின்மூலமாக வழங்கப்பட்டிருக்கின்றன. மரக்கன்றுகள் 2007–2008–லே 15 இலட்சமும், 2008–2009–லே 13.6 இலட்சமும், 2009–2010 இலே 20.75 இலட்சமும் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 90, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**90—**

**தரம் உயர்த்துதல்**

***58666—திரு. பெ. காமராஜ்:**

*மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, சிந்தலவாடி ஊராட்சி, நந்தன்கோட்டை அரசினர் ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, சிந்தலவாடி ஊராட்சி, நந்தன்கோட்டை, அரசினர் ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.*

LEGISLATURE TAMIL NADU ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS